5. அறிவிப்புகள்—*தொடர்ச்சி*

(ஆ) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்று நூறு நாட்கள் நிறைவடைந்ததை 24-8-2011 அன்று பேரவையில் கொண்டாடுதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மகத்தான வெற்றி பெற்று, மூன்றாவது முறையாக முதல்வராகப் பொறுப்பேற்று, (மேசையைத் தட்டும் ஒலி) மிகச் சிறந்த முறையில் நல்லாட்சி செய்து வரும் மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்கால ஆட்சி, இன்றைக்கு நூறு நாட்களை நிறைவு செய்கிறது (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) என்பதைப் பேரவைக்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். மகத்தான வரலாற்றுச் சிறப்புமிக்க ஆட்சியின் 100-வது நாளைச் சிறப்பிக்கும் வகையில், நாளை பேரவையில் சிறப்பாகக் கொண்டாடப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

4. மானியக் கோரிக்கைகள், 2011–2012, விவாதமும் வாக்கெடுப்பும்—*தொடர்ச்சி*

(அ) கோரிக்கை எண் 41 – வருவாய்த் துறை

(ஆ) கோரிக்கை எண் 51 – இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு—*தொடர்ச்சி*

(இ) கோரிக்கை எண் 9 – பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை

மாண்புமிகு திரு. அ. முஹம்மத்ஜான்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை பற்றிய மானியக் கோரிக்கையின்மீது மாண்புமிகு உறுப்பினர்கள் வெட்டுத் தீர்மானங்களைக் கொடுத்து, தங்களின் மேலான கருத்துகளையும், ஆலோசனைகளையும் வழங்கியுள்ளார்கள். அந்த வெட்டுத் தீர்மானங்களை மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கனிவான கவனத்திற்குக் கொண்டு சென்று நடவடிக்கைகள் எடுக்கப்படும். மேலும், தேவையான விளக்கங்களை எனது பதிலுரையில் அளித்துள்ளேன். ஆகவே,*